**அமெரிக்கா முத்தமிழ் பல்கலைக் கழகம், அமெரிக்கா**

இளங்கலை பட்டய படிப்பு

(ஆறு மாதம்)

தன்முனைக் கவிதைகள் பயிற்சியும் ஆய்வறிக்கையும்

பாடத் திட்டம்

அலகு : 1

தற்கால கவிதை இலக்கியம் , தன்முனைக் கவிதைகள் தோற்றம் , முதல் கட்ட வளர்ச்சியில் தன்முனை இலக்கணம்

அலகு : 2

அடுத்தடுத்த காலங்களில் தன்முனை வரைவிலக்கணம், நிகழ்கால தமிழ்க்கவிதை உலகில் தன்முனைக் கவிதைகள் , தன்முனைக் கவிதைகள் வளர்ச்சியில் முகநூல் குழுமங்களின் பங்கு

அலகு : 3

தன்முனைக் கவிதைகள் வளர்ச்சியில் சிற்றிதழ்கள் மற்றும் தமிழ் இலக்கிய நூல்களின் பங்கு , தன்முனைக் கவிதைகள் கவியரங்கங்கள் , இதுவரை வெளிவந்துள்ள கவிஞர்களின் தன்முனைக் கவிதைகள் நூல்கள்

அலகு : 4

தன்முனைக் கவிதைகளின் வளர்ச்சியில் தொகுப்பு நூல்களின் பங்கு, தன்முனைக் கவிதை நூல்களின் அறிமுகம் , நூல் விமர்சனம், நூல் ஆய்வு , போன்றவை குறுந்தகடுகள் அல்லது இணையத் தொடர்பு முகவரிகள்

அலகு : 5

ஆய்வறிக்கை சமர்ப்பித்தல்

**விதிமுறைகள் :**

- இளங்கலை பட்டய படிப்பு மேற்கொள்ளும் மாணவர்கள் மாதம் ஒருமுறை கொடுக்கப்படும் பயிற்சிகளுக்கு தகுந்த பதிலுரை மற்றும் தன்முனைக் கவிதைகள் பற்றிய சுய கருத்துகள் கொடுக்கப்படும் மின்னஞ்சல் வழி அனுப்ப வேண்டும்

- பல்கலைக் கழகம் பரிந்துரைக்கும் நூல்களைப் பெற்று ஆய்வறிக்கை சமர்ப்பித்தல். பட்டய படிப்பு மாணவர்களின் ஆய்வறிக்கை தயாரிப்பில் நெறியாளர் ஒருவர் நியமிக்கப்படுவார்.

- தமிழ் இலக்கிய விழாக்களில் தன்முனைக் கவிதை குறித்த உரை நிகழ்த்துதல் வேண்டும். பதிவுகளை பல்கலைக்கழகத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

- பட்டய படிப்பு முடித்ததும் சுயமாக எழுதிய குறைந்தது 25 தன்முனைக் கவிதைகளை ஆய்வறிக்கைக்கு நியமிக்கப்படும் நெறியாளரிடம் கொடுக்கவேண்டும். பட்டயப்படிப்பு மேற்கொள்ளும் மாணவர்களிடமிருந்து திரட்டப்படும் சிறந்த தன்முனைக் கவிதைகள் பல்கலைக் கழகத்தால் நூலாக வெளியிடப்படும்.

- சிறப்பாக தன்முனைக் கவிதைகள் - இளம்கலை பட்டயப்படிப்பு முடித்து தேர்வானவர்களுக்கு பல்கலைக் கழகத்தின் சான்றிதழ் பல்கலைக் கழக விழாவில் வழங்கப்படும்.

- இந்த பட்டயப்படிப்புக்கு கட்டணம் பல்கலைக் கழகத்துக்கு மட்டுமே அனுப்புதல் வேண்டும். இதற்கான படிவங்கள் பல்கலைக்கழக பதிவாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.